www.tamilarangam.net

# சக்தி



TAMILSK KVINNE TIDSSKRIFT

4.3 1995

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நீதி வழுவாத நீதி அமைச்சர்.

## சுகந்தி

அண்மையில் நோர்வேயிலுள்ள தொலைத் தொடர்புசாதனங்களில் முதன்மைப் படுத்தப்பட்ட விடயங்களில் சுகைலா ஆந்திராவஸ்னை ஜெர்மனியிடம் ஒப்படைப்பதா இல்லையா என்ற வழக்கும் ஒன்றாகும்.

சுகைலா அந்திராவஸ் ஓர் போராளி தன்னுடைய நாட்டிற்காக தான் அங்கத்தவராக இருந்த அமைப்பின் உத்தரவிற்கு இணங்க ஜெர்மனிய நாட்டிற்குரிய ஓர் விமானத்தைக் கடத்துவதற்கு துணைபோயிருந்தார். இச் சம்பவம் அவருடைய இறந்த காலம் என்பதும் அக குற்றத்திற்காக அவர் சோமாலியாவில் சிறை வைக்கப்பட்டார் என்பதும் எல்லோருக்கும் தெரிந்த உண்மைகள். இத்தண்டனைக்காலம் குறைக்கப்பட்டதும் ஜெர்மனிய சோமாலிய அரசுகளின் அரசியல் சூதாட்டத்தில் ( கைதிகளை மாற்றிக் கொண்டு ) குறிப்பிட்ட காலத்தை விட குறைந்த காலத்தண்டனையுடன் சுகைலா விடுவிக்கப்பட்டது என்பதும் உண்மைதான். இச் சம்பவங்கள் நடைபெற்றது இற்றைக்குப் பத்து வருடங்களுக்கு முன்பு.

ஓர் பெண்குழந்தைக்குத் தாயான சுகைலா கிட்டத்தட்ட நான்கு வருடங்களாக நோர்வேயில் வசித்து வருகின்றார். நோர்வேயில் அரசியல் தஞ்சம் கோரியிருக்கும் சுகைலாவை தம்மிடம் கையளிக்க வேண்டும் என ஜெர்மனிய அரசு கோரியுள்ளது. சுகைலாவை ஜெர்மனிய அரசிடம் கையளிக்கலாமா இல்லையா என்பது பற்றி நோர்வே அரசு முடிவெடுக்கும் முயற்சியில் ஈடுபட்டு இருந்தது. நோர்வே வரலாற்றில் ஓர் வழக்கு 19 தடவைகள் விசாரிக்கப்பட்டது இதுவே முதல்தடவையாகும். இறுதியாக சுகைலா ஆந்திராவஸ் ஜெர்மனி அரசிடம் கையளிக்கப்பட வேண்டும் என்று தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

ஜெர்மனிய அரசானது சிறைச்சாலைகளில் 70க்கு மேற்பட்ட சந்தர்ப்பங்களில் மனிதஉரிமைகளை மீறியுள்ளதாக பதிவு செய்யப்பட்ட ஆதாரங்கள் தெரிவிக்கின்றன. சுகைலா ஆந்திராவ் ஜெர்மனிய அரசிடம் கையளிக்கப்பட்டால் அவர் மீண்டும் தண்டிக்கப்படலாம் என்றும் அஞ்சப்படுகிறது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சர்வதேச குழந்தைகளின் உரிமை பாதுகாப்பு சட்டக் கோவைகள் சுகைலாவை அவரது மகளிடம் இருந்து பிரித்து ஜெர்மனிய அரசிடம் கையளிப்பதற்கு அனுமதிக்காததோடு சுகைலாவின் உளவியல் உடலியல் நிலைமைகள் சிறை போன்ற எந்த ஒரு தண்டனையையும் தாங்குவதற்கு போதியளவு உறுதியானதாகவோ பாதுகாப்பானதோ அல்ல என்று உளவியல் நிபுணர்களும் மருத்துவ ஆலோசர்களும் கருத்து தெரிவித்துள்ளார்கள். இந்நிலைமையில் மனிதாபிமான காரணங்களைக் கருத்தில் கொண்டு சுகைலா நோர்வேயில் தொடர்ந்து வசிப்பதற்கு எங்களுடைய நீதிபரிபாலனதிணைக்களம் விரும்பினால் மட்டுமே முடியும்.

இச்சந்தர்ப்பத்தில் நீதிபரிபாலன திணைக்களத்தின் 'நீதி வழுவா' தன்மை பற்றி நான் குறிப்பிடத் தவறுவேனாயின் நீதிக்குத் துரோகம் இழைத்தவராகிறேன்.

இலங்கையில் யுத்தநிறுத்தம் முறிவடைந்து பதட்டமான நிலைமை நிலவி இருந்த வேளையில் நோர்வேயில் அரசியல் தஞ்சம் கோரியிருந்தவர்களுக்கு கொழும்பில் தங்கியிருந்தார்கள், நண்பின் நண்பரின் . .... நண்பர் ஒருவர் வசிக்கின்றார் என்பது போன்ற ' மிக முக்கியமான பாதுகாப்பான' காரணங்களைக் காட்டி பலவந்தமாக நாட்டை விட்டு சிலரை வெளியெற்றியதோடு பலருக்கு கடவுச் சீட்டுககளுக்கு விண்ணப்பிக்க கோரிய கடிதங்களை அனுப்பி வைத்துள்ளனர். இரவுகளிலும் , அதிகாலையிலும் அகதிகள் முகாம்களுக்கு சென்று பலரைக் கைது செய்ததோடு உறவினர்களுக்கோ நண்பர்களுக்கோ தகவல்கள் எதனையும் தெரிவிக்க மறுக்கின்ற அற்புத செயல்களை செய்திருந்தது.

யுத்த கொடுரங்களினால் பாதிக்கப்பட்டு சிதறி ஓடுகின்ற பொஸ்னியா மக்கள் விசாவின்றி நோர்வேயினுள் நுழையும் உரிமையைப் பறித்துக் கொண்டது.

உளவியல் ரீதியாக பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுக் கொண்டிருந்த தாயையும், மூளைநரம்புகள் பாதிக்கப்பட்ட, நாளாந்த கவணிப்பு வழங்கப்பட வேண்டிய நிலைமையில் இருந்த இரண்டு குழந்தைகள் அடங்கிய பாக்கிஸ்தானிய குடும்பம் விண்ணப்பித்திருந்த மனிதாபிமான ரீதியில் தங்க அனுமதி கோரிய விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டதோடு சுகாதாரதிணைக்கள அதிகாரிகளும், வைத்திய ஆலோசர்களும் திருப்பி அனுப்புவது பாதுகாப்பானதல்ல என்று கூறியபோதும் விடியாத பொழுதில் அவர்களை நாட்டைவிட்டு அனுப்பி வைத்தவர்கள்.

www.tamilarangam.net

ஆவ்கானிஸ்தானைச் சேர்ந்த எழுத்தாளரும் பெண்களின் உரிமைக்காக போராடுபவரும் இரண்டு குழந்தைகளின் தாயான மரியாம் அஷிமியின் அரசியல் தஞ்சம் கோரிய விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டு எந்த அடக்குமுறைகளுக்கு எதிராகப் போராடி உயிருக்கான உத்தரவாதம் எதுவுமற்ற நிலையில் வெளியேறினார்களோ அங்கு திருப்பி அனுப்பட முடிவு செய்துள்ளது.

உலக அரங்கில் சமாதானப் பேச்சுவார்த்தை, சமாதானத்திற்கான நோபல்பரிசு போன்றவற்றை வழங்குவதன மூலம் தமது ஜீவகாருண்ய முகத்தைக் காட்டிக் கொண்டிருக்கும் நோர்வேயின் வெளிநாட்டவர்களுக்கான சட்டக்கோவைகள் மிகவும் கொடூரமானவை.

அண்மையில் எல்லோருடைய கவனத்திலும் நிச்சயம் தப்பியருக்காத ஓர் சம்பவம் தஸ்ரிமாநஸ்ரீனின் வாழ்நிலை மீதான அச்சுறுத்தல். இச்சந்தர்ப்பத்தில் நோர்வே அரசு மனிதாபிமாக குரல் எழுப்பியதுடன் தனது முஸ்லீம் மதவாதிகளுக்கு எதிராக

பிரச்சாரத்தையும் தொடர்ந்தது.ஆனால் சுவீடன் தஸ்லீமாவைப் பொறுப்பெடுத்துக் கொண்டது.

தஸ்லீமா நஸ்ரீன், மரீயாம் அஷிமி இருவருமே எழுத்தாளர்கள், பெண்களின் உரிமைகளுக்காகப் போராடியவர்கள், மதவாதிகளினால் உயிருக்கு ஆபத்து ஏற்படலாம் என்ற அவலத்தைச் சந்தித்தவர்கள்தான். ஒரேஒரு வேறுபாடு என்னவென்றால் தஸ்லீமா ஆவ்கானிஸ்தானில் இருந்து அரசியல் தஞ்சம் கோரியவர் மரீயாம் நோர்வேயினுள் நுழைந்த பின்பு அரசியல் தஞ்கம் கோரியவர் என்பதுமே.

தற்போது தலைமறைவாக வசிக்கும் அவருக்கு உதவி வழங்க விரும்புவோர் stottekonto. 08084179966 உங்கள் நன்கொடைகளை அனுப்பி வைத்து உதவலாம்.

இறுதியாக நோர்வே தொலைக்காட்சி ஒன்றிற்கு அவர் அளித்த பேட்டியில் இருந்து சில வரிகள்.

" நான் ஒருபோதும் நோர்வே அரசினை என்னை இங்கு வசிக்க அனுமதி தரும்படி இரந்து கேட்கப் போவதில்லை. உலகிற்கு மனிதாபிமான முகத்தினைக் காட்டும் இந்நாட்டில் இருந்துதான் போராடப் போகிறேன். அங்கு சென்றால் தலைமறைவு வாழ்வும் போராட்டமும் தான் அவற்றை நான் இங்கேயே தொடர்கிறேன்"

எல்லா மதமிதவாதிகளுக்கும் எதிராகப் போராடும் பெண்கள் அமைப்பில் முன்நின்று உழைக்கின்ற அங்கத்தவர்களுள் மரியாம் அஷிமி ஒருவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. நோர்வே அரசின் மனிதாபிமானம் பற்றிய வரைவிலக்கணத்தில் எத்தனையோ குடும்பங்களின் வாழ்வு தங்கியுள்ளது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பெண்ணிலைவாதம் பற்றி

(சென்ற இதழ் தொடர்ச்சி)

இன்றைய காலகட்டத்தில் பெண்களின் உரிமைக்கான போராட்டங்கள் அவசியமானது தானா? ஏனெனில் பெண்கள் இப்போது கல்வி, வேலைவாய்ப்பு , வாக்குரிமை போன்ற பல ஜனநாயக உரிமைகளைப் பெற்றிருக்கிறார்கள். பெண் பிரதமர்களையும், ஆளுமையுள்ள பெண் அரசியல் தலைவர்களையும் நாம் பெயற்றிருக்கவில்லையா, மேலும் பெண் ராஜதந்திரிகள் , மருத்துவர்கள், பொறியியலாளர்கள் , வழக்கறிஞர்கள், பேராசிரியர்கள் எனப்பல தொழிற்துறைகளில் பெண்களைப் பார்க்கிறோம். அப்படியானால் பிர்ச்சனைதான் என்ன , பெண்ணிலைவாதம் எமக்குத் தேவைதானா?

பெண்க்ள் உழைக்கும் சக்தி மக்களிடையே ஒரு செயலூக்கம் வாய்ந்த பங்கு வகிப்புதுடன் சிலர் பொருளாதார சுதந்திரம் பெற்றவர்களாய் இருப்பினும் தென்னாசிய நாடுகளில் பெண்கள் ( ஊழியம் பெறுபவர்களாய் இருந்தால் ) மிகக் குறைவான ஊதியம் பெறும் தொழில்களையே செய்கின்றனர்." உயர் " தொழில் செய்வோரிலும் மிகக் குறைந்த எண்ணிக்கையுள்ளோரே தீர்மானங்களை எடுக்க கூடிய செயல் நிறைவேற்றுத்துறை சார்ந்த அல்லது முகாமைத்துவ நிலைகளில் உள்ளனர்.
உழைக்கும் பெண்கள் பலர் "குடும்பத்தக்கு உதவும் " பொருட்டே தற்காலிகமாக பணியிடங்களிலும் மிக்ககுறைந்த ஊதியதிற்காக வேலை செய்பவர்களாகவே இருக்கின்றனர்.பெண்கள் வேலைக்கு அமர்த்தப்படுவதில் கடைசியிடத்திலும் வெளியே தள்ளப்படுவதில் முதலிடத்திலும் இருக்கிறார்கள். தொழிற்சாலைகள் இயந்திர மயமாக்கப்படும் போது அல்லது நவீனமயமாக்கப்படும் போது அது முதலில் பெண்களையே பாதிக்கிறது. இயந்திரங்கள் உழைக்கும் பெண்ணின் இடத்தைப் பிடித்துக் கொள்ள பெண்கள் வெளியே தள்ளப் படுகின்றனர்.பெண்தொழிலாளர்களை வெளியே தள்ளிய இந்தியாவின் பஞ்சாலைத் தொழிற்சாலையை இதற்கு ஒரு பொருத்தமான உதாரணமாகக் குறிப்பிடலாம்.

இலங்கையில் பெண்களின் சராசரி ஆயுட்காலம் எழுத வாசிக்கத் தெரிந்தோரின் புள்ளி விபரங்கள் போன்றவை உற்சாக மூட்டுபவையாக உள்ளன.ஆனால் பரந்த நோக்கும் போது பெண்கள் சகல நிலைகளிலும் ஆண்களுக்குப் பின்னாலேயே நிற்கின்றனர். நமது நாடுகள் இரண்டில் பெண்கள் பிரதமர் பதவிகளை வகித்த போதும் அரசியலில் பெண்களின் பங்களிப்பின் விபரங்கள் எமக்கு வியப்பைக் கொடுக்கின்றன.

www.tamilarangam.net

தென்னாசிய நாடுகளில் அரசியல் சுதந்திரம் பெற்ற நாளிலிருந்து இன்று வரையில் ஒரு சில பெண்களே பாராளுமன்றத்தில் அங்கத்தவர்களாக இருந்திருக்கின்றனர் எனவே முக்கியமான பொதுத்துறைகளில் ஒரு சில பெண்கள் இடம்பெற்றிருப்பதாக மட்டும் வைத்து ஒட்டமொத்தமாக பெண்கள அனைவரது நிலை திருப்திகரமாக இருக்கிறது என்று கூறிவிடமுடியாது.

( தொடரும்.)

## அவமானப்படுத்தப்ப்ட்டவள்

உங்களுடைய வரையறைகளின்
சாளரளத்துக்குப் பின்னால்
நீங்கள் என்னைத் தள்ள முடியாது.
இதுவரைகாலமும்
நிரந்தரமாக்கப்பட்ட சகதிக்குள் கிடந்து
வெளியே எடுத்துவரப்பட்ட
ஒருசிறிய கல்லைப் போன்று
நான்--
என்னைக் கண்டெடுத்துள்ளேன்
என்னுடைய நாட்களை நீங்கள்
பறித்தக் கொள்ள முடியாது
கண்களைப்பொத்திக் கொள்ளும்
உங்கள் விரல்களினிடையே
தன்னைக் கீழிறக்கிக் கொள்ளும்
ஒரு குட்டி நட்சத்திரம் போன்று
எனது இருத்தல்
உறுதி பெற்றது.
நிராகரிச்சப்படமுடியாதவள் நான்.
இனியும் என்ன?
தூக்கியெறியப்படமுடிய ாத கேள்வியாய்
நான் பிரசன்னமாய் உள்ளேன்
என்னை
அவமானங்களாலும்
அநாகரிக வார்த்தைகளாலும்
போர்த்துங்கள்

ஆனால்
உங்கள் எல்லோரினதும்
நாகரீகம் வாய்ந்த கனவுகளின் மீது
ஒரு அழுக்கு குவியலாய்
பளிச்சிடும் உங்கள் சப்பாத்துக்களை
அசுத்தம் செய்கிறேன்
என்னுடைய நியாயங்கள் நிராகரிக்கப்படும் வரை
உங்களின் எல்லாப் பாதைகளும்
அழுக்குப் படிந்தவையே,

சி.சிவரமணி.

www.tamilarangam.net

# சிறகொடிந்தாலும்

தேவா.



அவள் தன் வீட்டின் வாசற்படியில் உக்கார்ந்திருந்தாலும், மனம் பூராவும் மகளின் மேலேயே கவிந்திருந்தது.

www.tamilarangam.net

தூங்கிக் கொண்டிருந்த மகளின் அழுதழுது வீங்கியிருந்த கன்னத்தை அவள் தான் இருந்த இருத்திலிருந்தே பார்க்க முடிந்தது. மகளின் உருக்குலைந்த உடலும் அதனுள் ஒட்டின் கொண்டிருக்கும் இன்னோர் உயிரும் அவளுக்கு எதிர்கால பயம் பெரிய மலைபோல் தன்முன் குறுககே நின்கின்ற தோற்றம் தெரிந்தது கண்ணீர் பொலபொலவென்று கொட்டத் தொடங்கியது.
நானும் ஒரு தனிச்ச பொம்பிள. அந்நதப் பொட்டப்ப பிள்ளய இவ்வளவு நாளும் வச்சு காப்பாத்திக் கலியாணம் பண்ணிக் குடுத்தன். எனிமேல இரண்டு உயிரையும் எப்பிடி வைச்சுக் காப்பாத்துவன் இவோளுக்கு நல்ல வாழ்க்கை அமையோனு மின்னுதானே நானு இவள கட்டிக் கொடுத்தேன். இவ என்னடா என்னா ஏங்கிட்ட வந்துகின்னு புருசன்கிட்ட போவே மாட்டேன்னு இந்தப் புடிவாதம் புடிக்கிறாளே.

மகளிடம் காலை பிடித்த சண்டை நினைசைப் பிராண்டியது. இரண்டாவது தடவையாக கணவன் வீட்டை விட்டு வெளியேறி தன்னிடம் வந்து அழுதுபுரண்ட மகளை நினைத்த போது தான் ஏதோ ஒரு பெரிய தவறை செய்த மாதிரி அவள் மனதிற்குள் பெரிதாக உருண்டு புரண்டது.
சிலவேளை இவளுக்குத்தான் ராங்கி வந்து விட்டதோ என்று யோசித்தாள். இன்னாலும் இவள் சொன்னதுகள் நாம கேக்கக்குள இவளுக்கு அங்கேயிருந்து ஓடித் தொலைய வேனும் நெனைப்பு வரும் " படிச்ச பொம்பிளைக வாய படிப்பாளுகன்னு " நம்ம ஆளுக வூடுகளில பேசிகிறாக.
நாமளும் ஒரு பொட்டப்புள்ள தனிய வளத்திருக்கிறமே அதயு மானம்மரயாதயா வெச்சிருக்கமின்னு ரோசனயில இவள நானு அஞ்சாங் கிளாசுக்கு மேல படிக்க வைக்கல்ல. நம்ம இனசனத்தில எந்த பொம்புள தான் படிச்சிருக்கிறாளுக. அதான் " பொம்புள நாலு எழுத்துப் படிச்சிட்டா ஆம்பிளைக்கு கடுதாசி எழுதிடுவாளுக " ன்னுதா எல்லாருமா சொல்லிக் கிட்டு திரியிறாக. இவள நான் படிக்க வைக்காட்டித்தான் என்னாச்சு இப்போ. இவோளும் மாமியாரோட நல்லாத்தான் சண்டை போட்டிருக்கா. போடாமத்தான் இவளால இருந்திருக்கேலுமா. அவளும் இவள என்னா பாடு படுத்தியிருக்கா. ஒரு வேலக்காரிமாதிரி நல்லா வேலை வாங்கியிருக்கா. " ஒன் வீட்டில இவளோ பாத்திரங்கள கண்டிருப்பியா. இவளோ பெரிய குசினி இருக்கா , இவளோ சாமான்சட்டுக்கள ஒன்ட ஜென்மத்துக்கு தொட்டிருப்பியான்னு கேட்டுக்கிட்டே இருப்பாளாம்.தொணதொணன்னு இடுப்பு ஒடிய வேலைவாங்கிண்டே இருப்பாளாம்.

www.tamilarangam.net

" சட்டிப்பான கழுவுறது பொம்பிளைக்கு ஒரு வேலையாடி. இங்க பாரு நானு நீயும் ஒன் அண்ணனுக ரெண்டு பேரும் சின்னங்களாக இருக்குக்குள்ள பெரிய வூடுகளில சட்டிபான தேச்சுத்தான் ஒங்கள வளத்தேன் " னு இன்னிக்கு காலேல புடிச்ச சண்ட மூட்டம் சொல்லிப்புட்டேன். இவளுக்கு என்னமாத்தான் கோவம் வந்திடுச்சி . இவ என்னமாத்தான் என்ன பிலுபிலுன்னு பிடிச்சிக்கிட்டா. ஏன்டா அதச் சொல்லனும் அப்புடி வாங்கிக்கட்டனுமின்னு ஆயிப் போச்சி.

" நீங்க சட்டிபான கழுவினதுக்கு வேல செஞ்க வூடுகளில காசு குடுத்தாக நா கழுவிகதுக்கு உங்க மகளுக்கு என்ன கிடைச்சிருக்கு பாத்துக்குங்கன்னு அவ தன்னோட வயித்தில அடிச்சு காண்பிச்சபோ எனக்கு ஒலகமே ஆடிப் போச்சு."

" எங்கப்பா உசிரோட இருந்திருந்தார்ன்னா இப்புடி பாழுங்கெணத்தில கொண்டு போய் தள்ளியிருக்க மாட்டாரில்லன்னு " அப்புடி இப்புடி பொரிஞ்சு தள்ளிட்டா.
இவ அப்பன பத்தி நெனச்சுக்கிட்டிருக்கிற பெருமைக்கொன்னும் குறைச்சலில்ல. ஆமா இவளுக்கு இவ அப்பனப் பத்தி என்ன தெரியுமினன்னு

கேக்கத் துடிக்கேன் . பாவி மனசு கேக்கல்லேயே. அந்த மனிசன் பொலிஸ்காரன் என்ற பவிசுல என்ன ரெண்டாம் பொண்டாட்டியா வெச்சிருறந்த விசயத்த நா இவகிட்ட சொல்லாம ஒளிச்சாலும் இவளுக்கு எப்புடியோ தெரியாம இருந்திருக்காது இன்னாலும் அவ அப்பன் பெருமைய என்னமாத்தான் கொண்டாடிக்கிறா. நா தட்டத்தனிய ஒழச்சு என்னா பாடுபட்டு எம்புள்ளகளுக்கு சாப்பாடு போட்டேன். உடுபுடவ வாங்கிக் குடுத்தன் . இன்னிக்கு நா ஏ புள்ளைங்க ஆளாக்கிவுடுறதுக்கு ஆரோட ஒதவியுமில்லாம பட்ட கஷ்டத்த நெனச்சுப்பாக்கிறப்ப. . .
வசதியானவுக வூட்டுல ஒரு நாளைக்கு பத்துபக் கொத்து மாவிடிச்சதும் , அவுக பதின்னொன்னு கொத்து அரிசிய ஊற வெச்சிட்டு ஏங்கிட்ட பத்துக் கொத்துத்தான்னு சண்டைக்கு நின்னதும் . . . பத்துச்சல்லிக்குப் பறக்க வேண்டிய நாமளே அவுகிட்ட அதயும் குடுத்துப்புட்டு ஏமாந்து போயி இன்னாத்துக்கு. . நானு நாளாந்தம் செத்து செத்தே எம்புள்ளைங்கள ஆளாக்கி வுட்டதும் . . அதுக்கப்புறம் ..

www.tamilarangam.net

மகனுவ ரெண்டு பேரும் இப்ப நம்மள இருக்கியா செத்தியான்னு கூட கேக்க வராதப்போ நாம எதுக்காக இந்தப் புள்ளைங்கள வளக்க ஏ அந்தப் பாடுபட்டோமின்னு ரோதன வருது. புள்ளைங்க வளக்கத்தான் நம்மால முடிஞ்சது. பொம்புளப்புள்ளைய ஒழுங்கா வளத்து நாலுபேரு கத சொல்லுற மாதிரி வளி வைச்சுக்கிராம ஒருத்தன் கையில புடிச்சுக் குடுக்குமட்டும் நானுல்ல வயித்துல நெருப்பக்கட்டிக்கிட்டிருந்தேன்.

இந்தக் கலியாணம் காட்சி வெசயத்தையே ஆம்பிளதானுகளே எல்லாம் பாத்து செய்து வைப்பாக. நம்மளுக்கு என்ன தெரியும் . இவேன் சண்முகராஜாவும் அவேன் பொண்டாட்டியும் சேந்துகிட்டு " இது நல்ல எடம் உங்க மகளுக்கு இப்புடி ஒரு எடம் கிடைக்குமான்னு " ஒரு நாளைக்கு மூணுதரக்காயாவது ஏங்கிட்ட வந்து சொல்லவிட்டுப் போனாக. அவேன் பேச்ச நம்பி இந்த சம்பந்தத்துக்கு ஆமாப் போட்டுட்டன். இதில இருக்கிற களவு பொல்லாப்புகள நா எங்க கண்டேன்.
ஒருகுமர கரயேத்திர வெசயத்தில பொய்யும் புரட்டுமா இருப்பாங்களா என்னா. அவுக அவுக வூட்டுலயும் பொம்புளப்புள்ளைங்க கட்டிக்குடுத்து நல்லா இருக்காங்கின்னு தெரிஞ்சுகிட்டுத்தானே ஏன் புள்ளய அவுக வூட்டுல கட்டிக்குடுக்க ஆமான்னேன்.
போனதரக்கா அவ ஏங்கிட்ட வந்து அழுதுகின்னு நின்னப்போ நானு இவளயுட இழுத்துக்கிட்டு அந்தப்பய சண்முகராஜாகிட்ட போயி நின்னப்போ அவேன் " ஆம்பிள அப்புடி இப்புடித்தான் இருப்பான் . அதெல்லாம் ஒரு புள்ள புறந்தா சரியாப்போயிடுமின்னா " ன். அப்பறமா நா அவனத் தேடிப் போனப்பல்லாம் " புருசன்காரன் வூட்டிலேயே இல்லியேன்னு " அவேன் பொண்டாட்டி வாய் கூசாமா பொய் சொல்லி என்ன திருப்பி அனுப்பிச்சா.

ஏம்புத்திய செருப்பால அடிக்கணும். அந்த மாமியாக்காரி கழுத்து நெறய கைநெறய தங்கம் போட்டுக்கின்னு வந்து ஏ வூட்டு வாசப்படிய மிதிச்சு " உங்க பொண்ண சம்பந்தம் பண்ண வந்திருக்கேன்னு என்னமா கொழஞ்சா. நானுதான் அவ கதயில சரஞ்சு போயிட்டேன். எம்மக இருக்குற அழகுக்குத்தா இப்புடி ஒரு எடம் வந்து தானா கதவ தட்டுதோன்னு உருகிப் போயிட்டேன்.

பொட்டிமாதிரி இருக்கிற நம்மவூட்டுக்கு வூடுன்னுதான் பேரு. அந்த வூட்டுக்கமரைக்குள்ள மண்ணெண்ண அடுப்பொண்ண வைச்சுக்கிட்டு

www.tamilarangam.net

கிடைச்சா ஏதும் ஆக்கிச் சாப்பிட்டுக்கிட்டு. . கெடைக்காட்டி கடையில
என்னதாச்சும் வாங்கிக் கடிச்சுப்புட்டு பொழுதன்னிக்கும் பீடிக்கு லேபலு
ஒட்டினதர்தான் கெழமையில ரெண்டு மூணு நாளைக்கியாகிலும்
என்னத்தையாவது வாய்க்கு ஒணத்தியா ஆக்கி சாப்பிட்டுக்கலாம். அந்த ஓடரு
சாமானுகள சொன்ன டைமுக்கு முடிக்காட்டி அமுத்த ஓடரு லேசில
கிடைக்காதே. கைஒடய தோள்மூட்டம் வலி தாங்க முடியாம கண்ணயும்
செருகிட்டு வரங்காட்டியும் பேக் ஒட்டுற வேல.
ராவன்னா வெளக்கு பத்த வச்சுக்கிட்டு கெடைச்ச ஓடர குடுத்து
முடிக்கணுமின்னா மண்ணெண்ண காசுக்கு எங்க போறது.
இருட்டாவிச்சின்னா கடைக்கு ஓடிப்போயி பாணையும் தொட்டுக்க
தேங்காசம்பலயு வாங்கியாந்து வயித்துல அடச்சுப்புட்டு . . ஓடரு சாமானுக
மூலயில ஒருபக்கம் தெள்ளி வைச்சிட்டு அங்கினேக்கயே பாய விரிச்சு
படுத்துக்கிறதும் . . காலங்காத்தால கக்குசுக்கு. . குளிக்கிறதுக்கு
இங்கினயிருந்து தொங்கு தொங்கின்னு அந்த தொங்கலுக்கு ஓடிப் போயி நல்லா
வெடியிறதுக்குள்ள நாம்ப பொம்புளைங்க ஆம்புளைங்க எந்திரிக்க முந்தி
அரக்கப்பரப்ப குளிச்சு முடிச்க்கிட்டு ஓடியாறதும் தேத்தண்ணி வெச்சுக்
குடிக்க டைம் போயிருமேன்னு பார்லிப் போத்தல தேத்தண்ணிக்கடைக்கி
கொண்டுபோனயின்னா அங்க ஒத்த ரூபாய்க்கு போத்த நெறைய தேத்தண்ணி
கெடைக்கும். அதக் குடிச்சிப்பிட்டு நாம லேபல் ஒட்ட ஒக்காந்தயின்னா
பசிங்கிறது நம்ம வந்து கொழப்புற வரையில எந்திரிக்க மாட்டோம்.

இந்த பங்களாவுக்கு வாடக வேற. அந்தக் காலத்தில எந்த மவராசனோ
தன்னோட சொத்துப் பத்தெல்லா கோயிலுக்கு எழுதி வெச்சுப்பிட்டு புண்ணியம்
தேடிக்கிட்டான். கோயில் பாராமாரிக்கிறவனுக வாடக கூலிய கொண்டான்னுன்ன
நம்மள துன்னு புட்டுறான்னாக. மொதலாந் தேதி வெடியறத அவனுக
கண்ணுக்குள்ள எண்ணய வுட்டுப் பாத்துக்கிட்டுலுப்பானுக போல .
கொடயொண்ணயும் கமக்கட்டுக்குள்ள திணிச்சிட்டு வூட்டுக்கு முன்னாட
வந்தகின்னு அஞ்சு பத்துன்னாவது கறந்திடுவானுக. குடுக்காட்டி சாமிக்குத்தம்
வந்திடுமின்னு வேற நல்லா பயம் காட்டிப்புடுவானுக. என்னமோ நம்ம
கொழும்பு சீவியம் இப்புடிப் போவுது. " நம்ம தாயி புள்ளங்க ஈந்தியாவிலிருந்து
இங்க வந்ததுக வந்தோம் ஒழச்சோமின்னு போயிச் சேந்திருக்கப்படாதா. ஒழச்சி
ஒழச்சி என்னத்தக் கண்டோம். எங்க போனாலும் நம்ம தர்த்திரியம் நம்மவுட்டு
எங்க தொலையப் போகுவது.

www.tamilarangam.net

" அவுக சம்பந்தக்காரவுக எத்தினியோ காம்பராக்களும் வெச்சு சொந்தமா கல்வூடு கட்டி இருக்கிறாங்களாகேன்னு " நாலு பேரும் சொல்லிக் கிட்டாங்கா. அவுக நம்மகிட்ட பொண்ணு கேட்டு வந்த தரக்கா , இவுகளோட தராதரத்துக்கு ஏ வீடு தேடி வந்து பொண்ணு கேக்கிறாங்களேன்னு அசந்து போயி நின்னுட்டேன். இதில எதோ சூக்குமம் இருக்குமின்னு எனக்கு அப்பவே பட்டிச்சு. அந்த சண்முகராஜா பயலுக்கிட்ட இதக் கேட்டுத் தொலைச்சிட்டேன். அவேன் " அவுகளுக்கு பெரிய இடத்துல பொண்ணு எடுக்க ஏலுமாம். இன்னாம் நம்ம சாதிக்குள்ளதானாம் நம்ம ஆளுங்க பொண்ணு எடுப்பாங்களாம் . குடுப்பாங்களாமின்னு மெட்டுமில்லாமே என்னும் அவேன். " ஏ வுட்டுல அவுக சம்பந்தம் செய்யிற வெசயத்த ஆருக்கும் சொல்லிற வேணாமின்னும், ஆராவது தெரிஞ்சுக்கிட்டா பொறாமெயில இல்லாத்தயும் கொழப்பிவுட்டுறுவாங்க" ன்னு சொன்னான். அத நம்பி நானு ஒரு இளிச்சவாயா நம்புட்டேனே இப்ப அல்ல தெரியுது இவுக நாடகம்.

" அவனுக்கு வேற பொம்பிள இருக்குதாம். " இவ சொல்லுறா. அவேன் மூஞ்சிக்கு இன்னொருத்தி இருக்காளா. யம்மா. நம்ப முடியலியே. வேற ஜாதி பொம்பளகிட்ட அவேன் சகவாசம் வெச்சிருந்தத ஒடைக்கணமின்னுதான் அவேன் தாய்காரியும் அவ புருசனும் ப்ளமன் போட்டுக்கினு வந்து நம்மகிட்ட

சம்பந்தம் பண்ணி அவுக காரியத்த முடிச்சிருக்காக. இல்லாம் தங்க காரியத்துக்காக நம்ம கைக்குள்ள போட்டுக்கிட்டாக.

கலியாணத்தன்னிக்கு மணவறையில எம்மகளையும் , அவேனையும் சேத்துப்பாத்தப்போ ஏ வயத்த என்னமோ பண்ணிச்சு. ஏதோ தப்பு பண்ணினாப்புல அங்கிட்டும் இங்கிட்டுமாங் முழிச்சிக்கிட்டு இருந்தேன். ஆருக்கும் தெரியாம கண்ணக்கண்ணத் தொடச்சிக்கிட்டு திரிஞ்சேனா. கூட இருந்தவளுகள இல்லாம் " புடிச்சாலும் புடிச்சீக புளியங்கொம்பாக பாத்து புடிச்சீக" ன்னு சொன்னாளுக. இந்தப் பொம்புளைங்களுக்கு என்னத்தையாவது அரைச்சுக்கிட்டே இருக்கனும். பொறாம நினைச்சுட்டா எப்புடியாவது சொல்லிக் காம்பிச்சுரணும். இல்லாங்காட்டி அதுங்களுக்கு தல வெடிச்சுப் போயிடுமோ.

போனதரக்கயும் இவள கொண்டுபோயி புருசன்காரன் வூட்டுல ஒப்படைச்சிட்டு வந்து நானு இப்புடித்தா இருட்டுல ராவுபூரா ஒக்காந்திருந்தேன். ரெண்டு வாரத்தில மறுபடியும் ஏங்கிட்ட வந்து அழுதுகின்னு நிக்கிறாளே. நம்மால இவளக் காப்பாத்த முடியுமா. ரெண்டு மகனுகளும் இவ எப்படா கரையேறுவா நாம வழிய பாப்பமின்னு இருந்தானுக. அவனவனுக்கு பொம்ளைங்க தேடிக்கிட்டானுக. ஏ வூட்டுப்பக்கம்வாறது கூட இல்ல. இங்க வந்தா எங்க அம்மா வச்சப் பாக்கவூண்டி வந்துடுமோன பயநடதுண்டிருப்பானுக. போங்கடா அவுங்கள நம்பியா நா இத்தினி நா சீவிச்சேன். எப்புடியோ பீடிக்கு லேபல ஒட்டி

www.tamilarangam.net

பேப்பர் பாக் ஒட்டி நா பொழக்கிற வழி எனக்குத் தெரியாதாக்கும். ஆனா நாளெக்கே வெள்ளென நாமி ஆமாப்பம் புடிச்ச மாதிரி வந்துடுவானுக. இங்க இவகுனுக ரெண்டு பேரும். போனதரக்காயும் இவள நாங்க மூணுபேருமா திட்டித் தீர்த்தோம் .

"பொம்பிளைன்னா வூட்டு வேலை செய்துதானே ஆகணுமின்னு" பெரயவன் கத்தினான்.
" பொம்பிளைக்கு புருசன் வீடுதாண்டி எல்லாமின்னு" சின்னவன் இவள அடிக்கப் போயிட்டான்.
" அவுங்க எவளோ பெரீய எடத்து ஆளுகள் ஒருசதம் சீதனம் வாங்கிக்காம ஒன்ன முடிச்சுக்கிட்டு அவங்க செலவுல எவளோ பெரீசா கலியாணம் செஞ்சு நகநட்டெல்லாம் ஒனக்கு போட்டு கூட்டிக்கிட்டு போனாக. அவுகளுக்கு சேவுகம் பண்ண புடுத்து வைக்கணும் டின்னு " நானும் தான் இவனுகளோட சேந்துகிட்டு இவள குத்திக் கிழிச்சேன்.

ஆமா நீங்க காசுக்காக பாத்திரம் கழுவினீங்க. நா அவங்க எனக்கு சோறு போடுறதுக்காக பாத்திரம் கழுவணும், உடுப்பு தொவைக்கணும், வீடு கூட்டணும், முத்தம் பெருக்கணும், ஏவிற வேலையெல்லாம் ஓடிஓடிச் செய்யணும். ராவில ஒங்க பணக்கார மருமக வந்தா "

இதுக்குமேல இவளபேசவிடாம சின்னவன் இவள அடிக்க பக்கத்து வூட்டு கலீமா எடையில பூந்து ஒரு பொம்பிளய போட்டு அடிக்கிறதுக்கு அவ என்னாத தப்பு பண்ணினான்னு சண்டைக்கே வந்துட்டா. யப்பா தோட்டம் பூரா எங்க நாத்தம் தெரிஞ்சி போச்சி . போதாதுக்கு சலீமாவோட நாங்களும் சண்டைபுடிக்க போயாச்சு. இன்னாலும் அக்கம் பக்கத்துச் சனம் பூரா " இப்புடி ஒரு வெக்கங் கெட்ட ஆம்புளையும் இருக்கானா " ன்னு பேசிக்கிட்டாங்க. இவ பட்ட கொடுமய அழுதழுதுதே என்கிட்ட தீத்திகிட்டு இப்புடி இப்ப படுத்துக்கிட்டு கெடக்கிறாளே. என்னமா இருந்த புள்ள இப்புடி ஒடஞ்சு பொயிட்டா. இவ வேற எங்கதான் போயி அழுவா. இவளுக்கு நானும் வேற கொடும பண்ணிட்டேனா. மக நல்லா இருக்கணுமின்னுதான் எந்த தாய்க்காரியும் எல்லாத் தெய்வத்தையும் வேண்டிக்குவா. கட்டிப் போன எட்டு மாசத்தில புள்ளயும் வயத்தில சுமந்துகிட்டு எங்கிட்டு வந்து எங்காலப் புடிச்சுக்கிட்டு " அம்மா எனிமே நா செத்தாலும் அங்க போக மாட்டன் "னு இன்னிக்கு காலேல

அழுதாளே அது ஏ நெஞ்சுக்குள்ள கல்லுமாதிரி எறங்கிடிச்சு. அப்பவே எனக்கு தெரிஞ்சி போச்சி இவ அங்க என்னமா கஷ்டப்பட்டிருப்பாள்ன்னு.

www.tamilarangam.net

ஒருதரக்கா நா " மகள பாத்துப்பட்டு வந்துடுவமேன்னு " பெத்தவயிறு கேக்காம அங்க போயி இவள பாத்துப்புட்டு அங்கேயிருந்து பொறப்படுறதுக்கு முன்னாடி அந்த பாதகிக்கிட்ட " எம்மகள நல்லாப் பாத்துக்குங்கனு சொல்லிப்புட்டேன்" அதுக்கு அவ " ஓங்க மக சந்தோசமாத்தானே இருக்கா . ஓங்க மக சந்தோசமா இல்லாமயா புள்ளய வயித்துல வாங்கிட்டான்னு சொன்னர்" ஆமா இவுகளும் இவுகட சந்தோசமும் ஏ வாயில நல்லாத்தா வரது.!

நாளைக்கு காலங்காத்தால இவுனுக ரெண்டு பேரும் வந்தானுகன்னா இங்க பெரிய கலம்பரமே இருக்கு. இவ பட்ட பாடுக இவனுக காதில ஏறவா போகுது. இவளும் அழுது புலம்பத்தான் போறா. எங்கிட்ட கொட்டின கண்ணீர் போதான்னு இவனுககிட்டயும் கொட்டப் போறா. அவனுக கொலச்சு இங்க ஆகப் போறது ஒன்னுமில்லலே. ஆமா. இவ இப்ப எங்கிடடே இருந்துட்டுப் போவட்டுமே. என்னிக்காவது இவ புருசன் வந்து கூட்டிக்கிட்டு போயிடமாட்டானா. . . . . போயிடுவான். போயிடுவான் ம். .

நானுதான் அந்தக் காலத்தில மூணு புள்ளைங்கயயும் என்னா கஷ்டப்பட்டுக்கிட்டு வளத்தப்போ எம் புருசன் நாளக்கு நம்மள சேத்துக்குவான். நாளன்னிக்கு சேத்துக்குவான்னு நாளுக்கும் பொழுதுக்கும் காத்துக்கிட்டிருந்தேன். அவேன் மூத்தவகிட்ட சாப்பிறதும் , இங்க எங்கிட்ட வந்து குந்திக்கிட்டிருந்த நேரம் பூரா மூத்தவளயும் அவ புள்ளைங்களையும் பத்தி பொலம்பிக்கிட்டே இருந்ததுமாவே காலத்தக் கொண்டு போயிட்டான். சாகக் கிடக்கக்குள்ளதானாம் ஏ ஞாபகோம் அவனுக்கு வந்திச்சாம். " ஏம்புள்ளைங்கள நீ எப்புடியும் காப்பாத்திருவேன்னுகிட்டே " கடைசி நேரம் மட்டும் புலம்பினான். ஆமா உசிரோட இருக்கக்குள்ள மட்டும் அவனா எம்புள்ளைங்கள காப்பாத்தினான். காலம் பூரா எம்மனசுக்குள்ள கெடந்து முடங்கிக்கிட்டிருந்த பாரோம் அவேனுக்கு உசிர் போறக்காயாவது ஒறச்சதே.
எப்புடியோ எம்புள்ளைங்களுக்கு சோறு போட்ட எனக்கு இவ புள்ளைய வளக்குறது பெரீய காரியமா போயிடாது! நாளேல இருந்து மகளுக்கும் சேத்து பீடிக்கு லேபல் ஒட்டுற ஓடர கொஞ்சம் கூட எடுத்தாப் போச்சு. எப்புடி எப்புடியோ புழச்சுக்கலாம்.
காலங்காத்தால இவனுக வந்தா வாசப்படியில வெச்சே வெரட்டணும்.

இப்போது லேசான மனதோடு எழுந்தாள் அவள். சேலை முந்தானையை நன்கு உதறி மீண்டும் இடுப்பில் சொருகினாள். வாசல்படியில் நின்றபடி எச்சிலைக் கூட்டி அது தூரப்போய் விழும்படி காறித்துப்பி விட்டு அவள் படுக்கப் போனாள்.

www.tamilarangam.net

# சங்கதிகள்

# ஓர் அறிமுகம்.

## சிந்துபார்கவி.

புலம்பெயர்ந்த எமது வாழ்வில் குறிப்பிட்ட சிலகாலங்களில் சிலசில வெளிப்பாடுகள் முன்னணி வகித்துள்ளன.

ஆரம்பத்தில் புகலிட சஞ்சிகைகள், பின்பு வீடியோ சஞ்கிகைகள், ஒலிநாடாக்கள் என்று ஏதோ ஒரு வழியில் எமது உணர்வுகள் , எதிர்பார்ப்புக்கள், ஏமாற்றங்கள் எதிர்காலம் பற்றி நம்பிக்கையை கூறிக் கொண்டிருக்கின்றன. வெளிவந்து கொண்டிருந்த சஞ்சிகைகள் யாவும் தத்தமது கருத்துக்களை தமக்குரிய பாணியில் கூறி வந்தன. துர்அதிஷ்டவசமாக பல சஞ்கிகைகள் வெளிவராது போய்விட்டன. நாம் கஞ்சிகை வாசிப்பதில் காட்டும் ஆர்வமின்மையும், நாம் வாழும் நாடுகளில் எமது இருப்பை உறுதி செய்வதற்கான வாழ்நிலைக்கான போராட்டமும், தேவைகளின் அதிகரிப்பும், அதை ஈடுசெய்வதற்கான உழைப்பின் அதிகரிப்பும் , சில பத்திரிகைகளின் காலத்தை கருத்திற்கெடுத்துக் கொள்ளாத விமர்சனப் போக்கு போன்ற பல காரணங்கள் சஞ்சிகைகளின் வளர்ச்சிக்கு குறுக்கே நிற்கின்றன என்று கூறலாம். சஞ்சிகைள் பெருமளவில் வெளிவருவது நின்றுவிட்டாலும் அவ்வெற்றிடங்களை நிரப்பும் வேகத்தில் இசைநாடாக்கள் வெளிவந்து கொண்டிருப்பது மகிழ்ச்சிக்குரியதே.

தற்போது வெளிவருகிருன்ற இசைஒலியிழைகளை மேலெழுந்தவாரியாக ஜனரஞ்சகமான பொழுது போக்கு இசைவடிவங்கள், கருத்துப்பரப்புதலை நோக்கமாக கொண்டவை என இரண்டாகப் பிரிக்கலாம். வளர்ந்துவரும் தொழிநுட்பம் பல வேலைகளை இலகுவாக்குவதால் எமக்கு பல வேறுபட்ட இசைதட்டுக்கள் குறுகியகாலப்பகுதியில் எம்மை வந்தடைகின்றன. நாளுக்குநாள் விற்பனைக்குவரும் இந்திய சினிமா இசைத்தட்டுக்களுடன் போட்டிபோட்ட வண்ணம் புலம் பெயர்ந்து வாழும் இடங்களிலிருந்தும் இசைதட்டுக்கள் வெளிவந்து கொண்டிருக்கின்றன.

www.tamilarangam.net

எமக்கென்றோர் இசைவடிவம், எமது நாளாந்த வாழ்வை, நிலைமைகளை வெளிக்கொண்டுவர முடியவில்லையே என்று அங்கலாந்து கொண்டிருந்த எம்மில் பலருக்கு தற்போது வெளிவந்து கொண்டிருக்கும் இசைதட்டுக்கள் சற்று நம்பிக்கையூட்டக் கூடியதாக இருக்கின்றன. இச்சந்தர்ப்பத்தில் தமிழீழ விடுதலைப்புலிகளின் ஈழம் சார்ந்த இசை முயற்சிகளைப் பாராட்டாமல் இருக்க முடியாது.

அண்மையில் வெளியந்த சங்கதிகள் சொல்ல வந்த செய்தி பற்றிக் கூற முற்பட்டு வேறு சங்கதிகள் பேசிக் கொண்டு இருக்கிறேன் என்று நினைக்கிறேன். ஒலிஓவியங்கள் தயாரித்து வழங்கிய சங்கதிகளுக்கு வருவோம்.

சங்கதிகள் சொல்ல வரும் விடயங்கள் புலம் பெயர்ந்த வாழ்வின் அவலர், எமது சமூக அமைப்பில் கடுமையாக கடைப்பிடிக்கப்பட்டு வரும் சீதன வழக்கத்தின் காரணமாக சகோதரின் சோகம், (கட்டிடக் காட்டுக்குள்ளே )

உழைக்கும் மக்களின் உள்ளக்குமுறல் ( உயிர் உழுதுபயிர் வளர்த்து ) குடிபுகுந்த நாட்டில் சந்திக்கும் அடக்குமுறை என்று பல விடயங்களை தொட்டிருக்கின்ற இந்த ஒலி ஓவியங்களுக்கு வர்ணமூட்டிய ஜோன்நிராந்தா டீ சில்வாவும் மனதை விட்டு அகலாத வயலின் இசை வழங்கிய டிகிரி பண்டா ரட்நாயக்காவும் பாராட்டுக்குரியவர்கள்.

பாடல்கள் உயிர்த்துடிப்புடன் அமைந்திருப்பதோடு , நெஞ்சில் நிறைந்தவைகளை மீட்டித்தருகின்றன.

பெண்களின் குரல்கள் பற்றி நீண்டகாலமாக எனக்கு இருந்த அபிப்பிராயத்தையும மாற்ற வேண்டிய நிலையை சங்கதிகள் ஏற்படுத்தியுள்ளது. உச்சஸ்தாயில் கீசுகின்ற பெண்குரல்களில் தான் பல பாடல்கள் கேட்டுக் கேட்டு சுமுகமான குரல்களில் பாடும் பெண்குரல்கள் இல்லையா என்ற அச்சம் எனக்கு அடிக்கடி எழுந்ததுண்டு. அப்படி ஒரு சந்தேகம் ஏற்பட்டிருக்கவே கூடாது என்று சாந்தி, கௌரி, லோகேஸ்கரி, ஜஸ்மின் நிருபிக்கின்றனர். யுத்தங்கள் என்றென்றும் பாடல் மனதை விட்டு இன்னமும் அகலவில்லை நீங்களும் ஒருதடவை கேட்டுத்தான் பாருங்களேன்.

www.tamilarangam.net

# பெண்ணுக்கு பெண்ணே எதிரியா?

## ராஜம் கிருஷ்ணன்

பெண்ணுக்குப் பெண்ணே எதிரியா? மாமியாரே மருமகளைக் கொடுமைப் படுத்துகிறாள், வரதட்சணைக்காகக் கொலையே செய்கிறாள்..

... மாதர் மாநாட்டில், பெண் அமைச்சர் உரை.

கொட்டைத் தலைப்பில் இந்த விசயம் கண்களைப் பறிக்கும் எழுத்தில் பத்திரிகைச் செய்தியாக நெஞ்சில் இடிக்க அறிவுறுத்துகிறது.

பெண் சிசுக் கொலையை எதிர்க்கிறீர்களே கொலையை ஆண்பிள்ளையா செய்கிறான்? பெண்தானே செய்கிறாள், தாயே கொல்கிறாள், இல்லாட்டி பாட்டி இல்லாட்டி தாதி .. என்று ஓர் அம்பை வீசி இந்தப் பத்திரிகை " நிருபர் " கூட்டம் சமுதாய நீதிக்குக்குரல் கொடுக்கும் பெண்களை மடக்குகிறது.

இந்தப் பத்திரிகைக்காரக் கும்பல்களுக்கு எந்தச் செய்தியிலும் கவர்ச்சி, விறுவிறுப்பு. கிளுகிளுப்பு வேண்டும். " பெண்" பற்றிய செய்திகள் இதனாலேயே முக்கியத்துவம் பெற்று விடுகின்றன. இதற்கென்று தனியான "பாஷை" கள், சங்கேதங்கள், ஆச்சரியக்குறிகள் உண்டு.
எந்தப் பெண்கள் மகாநாடானாலும் தவறாமல் வந்து இடம் பற்றிக் கொண்டு தனிப்பத்திச் செய்திகள் வெளியிடுவார்கள். விதிவிலக்குப் பத்திரிகைகள் மிக அபூர்வமாக இருக்கின்றன.

ஒரு மாநாட்டில் ஊதியம் இல்லாமல் உழைக்கும் பெண்களின் நிலைபற்றிப் பேச்சு வந்தது.

உழைக்கும் மகளிர் என்று குறிப்பிடுவதனால் உழைக்காத மகளிர் என்று பெருங் கூட்டம் இருப்பதாக கொள்ளல்லாகாது. பொருளாதார மேல் மட்டங்களில் சதைகொழுக்க, மேனிநலுங்காமல் இருக்கும் பெண்களை ஒரு சிறு வீழுக்காட்டினரை வேண்டுமானால் உழைக்காத மகளிர் எனக் கொள்ளலாம்.

உழைக்கும் மகளிர் என்பவர், ஒருவர் குறிப்பிட்ட அலுவலகத்துக்கோ, வேலைத்தலத்திற்கோ வீட்டை வீட்டுச் சென்று உழைத்து ஊதியம் பெறுகிறார்கள். தம் உழைப்புக்கு ஊதியம் பெறுகின்றவர்களை – உழைக்கும் மகளிர் என்று சொல்கிறோம். ஆனால் இலட்சக்கணக்கான பெண்கள் காலையில் கண் விழித்ததிலிருந்து, படுக்கும் வரை உழைக்கிறார்கள். அடுப்படியில் வேகிறார்கள், மாட்டுக் கொட்டிலில் சாணி பெருக்கி மெழுகிக் கழுவுகிறார்கள், துணி துவைக்கிறார்கள், பலகாததூரம் நடந்து தண்ணீர்

www.tamilarangam.net

சுமக்கிறார்கள், துணி துவைக்கிறார்கள், பெட்டி போடுகிறார்கள், இரைக்கிறார்கள், கரைகட்கிறார்கள், ஊடே நூல் சுற்றுகிறார்கள், தறிபோடுகிறரர்கள், குத்துகிறார்கள், புடைக்கிறார்கள், நோயாளிகிளுக்குப் பணிவிடை செய்கிறார்கள், குழந்தை பராமரிக்கிறார்கள், தைக்கிறார்கள், வலை பின்னுகிறார்கள் . என்று அடுக்கிக் கொண்டே போகலாம்.

பாண்டம் செய்வதையும் தோலை ஆடையாகத் தைப்பதையும் முதலில் கண்டு பிடித்துச் செய்தவள் பெண்ணே. தன் உபயோகத்திற்கு என்று செய்யத் தொடங்கி , பண்டமாற்று முறையில் இந்தப் பணயன்களை ஒருவருக்கொருவர் பரிமாறிக் கொண்டனர். இன்றளவும் எல்லா கலைத்தொழில்களும் பெணகளுக்கு வாணிப ரீதியான உழைப்பாக மதிப்பைப் பெற்றுத்தரவில்லை. ஏனெனில் அது வாணிப ரீதியான உழைப்பாக மாறும் போது ஆண் அதைக் கைக் கொண்டு விடுகிறான். வீட்டிலே பெண் கமையல்காரிதான். ஆனால் அது தொழிலாக உழைப்பூதியம் கொண்டு வரும் போது ஆணுக்குத்தான் பெருவாரியாக உடமையாகிறது. எனவே உழைப்பூதியம் இல்லாமலே பெண் உழைக்கிறாள்.. . இந்த உரைகளின் சாராம்சத்தை மேற்படி பத்திரிகைகள் எப்படி வெளியிடுகின்றன?

பெண்கள் தங்கள் குடும்பங்களில் சமைப்பதற்கு ஊதியம் கேட்கிறார்கள். குடும்பப் பெண்களுக்கும் சம்பளம் வேண்டுமாம். லீவு, பஞ்சப்படி எல்லாம் கேட்கிறார்கள்.

இதைத் தொடர்ந்து , சில ஜோக்குகள் –

பிச்சைக்காராக ஒரு அதிகாரி காட்சி தருவார்.
" என்ன ஆயிற்று இவருக்கு? "
"அவர் மனைவிக்குச் சம்பளம் கொடுத்து இந்த நிலைக்கு வந்து விட்டார்"
என்ற மாதிரியில் ஆடவர். இவர்கள் அநியாயக் கோரலில் பரிதவிப்பதாகச் சில சித்திரங்கள்

இதே போன்றுதான் வரதட்சணை கேட்பவள் மாமியாரே என்ற சொல்லும்.

பெண் அமைச்சர் அதைக் குறிப்பிடுவதும் மிக முக்கியத்தவம் பெறுகின்றன.

தொலைகட்காட்சி நாடகங்கள் கதைகளில் கூட மாமியார் ஒரு பெண்ணை வதைப்பதையும் அவளே மண்ணெண்ணையை ஊற்றி எரிப்பதும் சித்தரிக்கப்படுகின்றன.

நடைமுறையில் பெண்களே நிர்வகிக்கும் கல்வழி நிறுவனங்களில் பெண்க்ள மகிழ்ச்சி பெற்றவர்களாக இருக்கிறார்களா?

பழைய மாமியார் மருமகள் உறவு நடப்புக்களே புதிய உருவில் மாறியிருக்கின்றன. அதே மனப்பாங்குகள், புதிய வடிவில் அடக்கலும் மோதலும் என்று புறத்தேயுள்ள ஆதிக்கங்களை உணரச் செய்யாமல் சிரஞ்சீவித்தவம் பெற்று இருக்கின்றன.

www.tamilarangam.net

பெண்கள் படிப்பதற்கென்று பத்திரிகை நடத்துபவர்கள் சில பெண்களைச் சாட்சியாக வைத்துக் கொண்டு பழைய ஆண் ஆதிக்க சக்திகளாகவே இயங்குகின்றனர்.

பெண்களின் பிரச்சனைகளையும் அவர்கள்படும் பிரசவகால வேதனைகளையும் கூட ஒரு சதைப்பிடிப்புடன் எழுதுவதில் தனக்கு நிகர் தானே என்று தோள் தட்டும் " இலக்கியவாதி" நான் நூறு பெண்களைப் புணர்ந்த அநுபவத்தில் அவர்கள் வாயிலாக வேதனைகளை உணர்ந்து எழுதுகிறேன் எனக்கு கற்புக் கிடையாது. அதேபோல் இந்தப் பூமியில் பிறப்பெடுத்த எந்தப் பெண்ணுக்கும் கற்பொழுக்கம் கிடையாது அப்படிச்ச சொல்பவர்கள் வேடதாரிகள் , குடும்பங்கள் பொய் என்று புதிய சித்தாந்தத்தை மகளிர் கூட்டத்தில் துணிந்து சொல்லி மார்தட்டுகிறான்.

இப்படி ஒரு பெண் சொல்ல முடியுமா? நீ யாரடா எங்கள் மீது சாணியை வீச என்று கேட்கக் கூட இவர்களுக்குத் திராணி கிடையாது. ஒருத்தியை மற்றவள் பார்த்துக் கொண்டு உட்கார்ந்து இருக்கிறார்கள். இந்தப்புதிய அலையின் மகத்துவத்தில் பிரபல்யத்தில் கிறங்கிப் போகும எழுத்துப் பெண்மணிகளும் நான் சதையே, நான் தசையே, இதுவே ஜீவ சக்தி என்று கொச்சை இலக்கியப் படைப்பு நாயகிகளாகப் பெருமை பெறுகிறார்கள்.

பெண்ணுக்குப் பெண் என்ற எதிர்ப்புகளும் நான் சதை தவிர வேறில்லை என்ற புத்தறிவுப் பெண்களும் தன்தலையில் தானே மண்ணைப் போட்டுக் கொள்ளும் கைங்காரியத்தை செய்து கொண்டிருக்கிறார்கள். எனவே இதை ஓக்கி வீடுவதில் எல்லாவீத தொடர்புச்சாதனங்களும் மிக ஊக்கமாக இயங்குகின்றன.

ஒருதாயே பெண் மகவைக் கழுத்தைத் திருகிக் கொல்கிறாள். என்ற செய்தியை என்னாலும் நம்ப முடியவில்லை.
ஆனால் நான் சொல்கிறேன் கொன்றேன் அம்மா என்று செஞ்சுடைய அவர்கள் விம்மிய போது பெண்மையின் அவல நிலை நெஞ்சை உருக்குவதாக இருந்தது. வயிற்றுக்குப் பற் றாத பொருளாதாரநிலை, நுகர் பொருள் வாணிப

கலாச்சாரத்தின் பற்றியெரியும் தேவை நிர்ப்பந்தங்களும் ஆணாதிக்க கற்பொழுக்க மேநிலைக்கலாச்சாரத்தின் கிடுக்குப்பிடியும் பெண்ணைச் செல்லாக் காசுக்கும் மதிப்பில்லாதவளாக மட்டும் செய்து வீடவில்லை. அதற்கும் கீழே போய் இவள் ஒரு சுமை. இந்த வாழ்க்கையின் அவலங்களை என்னால் சுமக்க முடியவில்லை. பெண்ணாகப் பிறந்து நீ இன்னும் அவலங்களைச் சுமக்க வேண்டுமா, வேண்டாம் தாயே என்று நஞ்சூட்டுகிறார்கள். இந்த மூடத்தாய் இதற்கு தன்னையே கொன்று கொள்ளலாம் அல்லவா? ஆனால் இவள் இன்னும் புருசனுக்காக வாழ்கிறாள் .அவன் அதைக் கொன்று வீட்டு வாடி என்று உத்தரவிடுகிறான்.

www.tamilarangam.net

அவளே அதைக் கொல்பவளாக இருந்தாலும் தன்னைப் பெற்று வளர்த்து தனக்கு சுகபோகம் அளித்து தன்னை வாழவைக்கும் அன்னைக் குலத்தின் ஒரு பூந்துளியாகப் பிறந்த மகவை ஏனடி கொல்கிறாய் என்று கேட்கலாமே? அப்படி ஒரு சொல் வந்திருந்தால் அவள் அதைக் கொல்வாளா?

இப்போது அவன் வெறி, ஆதிக்கம், கோலோச்சும் மிருகத்தனங்களின் கோரங்களல்லவா அந்தப் பூந்துளியின் மீது படிகிறது.
அதைக் கொல்ல இப்படி யொரு சமாதானத்தை ச் செய்து கொள்கிறாள்.

கணவர் இறந்ததும் உயிரோடு எரிக்கும் மங்கையரை அவர்களாகவே நெருப்பில் வீழும் பக்குவத்திற்கு வளைத்திருக்கின்றனர் அல்லவோ?

நாம் விடுதலை கோரிய அந்நிய ஆட்சியினர் இந்தக் கோரக் கொலைகளுக்கு முடிவு கட்ட கடும் தண்டனையும் சட்டமும் கொண்டு வந்தார்கள். இந்த நம்மை நாமே ஆண்டு கொள்ளும் ஆட்சியில் பெண்கொலைகள், சிசுக் கொலைகள் ஆயிரம் ஆயிரமாக நடந்தாலும் வெளித்தெரியாமலே ஒப்புக் கொள்ளப்பட்டு விடும் சூழ்நிலையைக் காண்கின்றோம்.

ஆங்காங்கு கொடி தூக்கும் மாதர்அமைப்பு எதிர்ப்புகளும் சிறுபான்மைப் பிசுபிசுப்புக்களாய் ஓய்ந்து போகின்றன. அத்துடன் கூட இல்லாமல் அநியாயங்களுக்கு நியாய வாதங்களும் கூடக் கண்டு பிடிக்கப்படுகின்றன என்றால் மிகையில்லை.

பெண்குழந்தை குடும்பத்துக்கு மட்டும் சுமையில்லை. அவள் சமுதாயத்துக்கும் சுமையே. மக்கள் பெருக்கத்துக்கு முக்கியகாரணி அவளே எனவே அவளைக்கருவிலே அழிப்பதுதான் மக்கள் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தக் கூடிய வழியாகும் என்ற கருத்தக்களும் வலிமை பெறுகின்ற னவே?

இதேவகையில் பெண் அழிப்புக்கு காரணிகளாக இருக்கும் வரதட்சணை, சீதன வகைகளும் நியாயமாக்கப்படாமல் இல்லை. இந்த நியாயங்களில் நேர்முகம் மறைமுகம் என்று இருவகைகளும் இருக்கின்றன.
மறைமுக நியாயங்கள் ஆட்சிப்பீடங்களிலோ , பெரும் பதவிகளிலோ செல்வாக்கு உடையவர்களாக இருப்பவர்கள் தங்கள் வாரிசுகளின் திருமணங்களில் பணத்தை தண்ணீராக செலவிடுகிறார்கள். குமாரிகளின் திருமணங்களுக்கு இவர்கள் வைக்கும் சீர வரிசைகள் செய்நேர்த்திகள் திருமண வைபவங்களின் ஆடம்பரங்கள் அனைத்தும் பத்திரிகைகளில் வண்ணப்படங்களுடன் வெளியாகின்றன. இவற்றைப்பார்க்கும் மக்கள் யாராக இருந்தாலும் இவ்வாறு கொடுப்பது சரியல்ல என்று சொல்கிறார்களா ? எதிர்ப்புக்காட்டுகிறார்களா? இல்லையே இது மறைமுகம்.

மாறாக அத்தகைய ஆடம்பர வைபவங்கள், வண்ண வரிசைகள் எல்லாம் தங்கள் மகன்களுக்கு கேட்கலாமே என்ற நியாயமும் தங்கள் பெண்களுக்கு இவ்வரிசைகளைச் செய்தால் சமூகத்தில் பெரிய மனித கௌரவத்தை நிலை நாட்டக் கூடும் என்று விரும்பும் பெற்றோர் நியாயமும் தான் ஏற்படுகின்றன.இது நேர்முகம்.

www.tamilarangam.net

எனவே பெண் வர்க்கத்தைச் சுரண்டிக் கொல்லும் அநீத " தருமங்கள்" அவர்களாலேயே ஒப்புக் கொள்ளப்படும் ஒரு சூழல் அவர்களை அறியாமலே உருவாகி வந்திருக்கிறது.

பெண்ணுக்குப் பெண்ணே எதரி என்ற நடைமுறையை ஆழ்ந்து பற்றியிருக்கும் வேர் எது? எங்கே நிலை கொண்டிருக்கிறது?
இதைப்பற்றி பாதிக்கப்பட்டிருக்கும் பெண் இனமே சிந்திப்பதில்லை. அந்தப் பழைய நாட்களில் மருமகளைக் கொடுமைக்குள்ளாக்கிய மமாமியாரின் பின்னணி யாது?

மாமியார் என்பவள் மகனையே சார்ந்திருக்கும் படியாக விதித்துவிடப்பட்ட சார்புப் பிராணி. அந்தக் காலங்களில் அவளுக்கு கல்வி பொருளாதார சுய சார்பு, சுதந்திரம் எதுவும் கிடையாது. பிறந்த வீட்டு வண்மைக் கொடையே பெண்ணுக்கு மருமகளாக வருபவளுக்கு மதிப்பளித்தது. இதே மனப்பாங்குடன் வரும் மருமகளைப் பார்க்கிறாள் அந்தக் காலத்தில் இவள் புதிய மருமகளாக வந்த போது , கணவனுடன் பேசமுடியுமா? நிமிர்ந்து பார்க்க முடியுமா? பகலில் தலைகுனிந்து இலையில் சோறு பரிமாறி இருட்டில் அவனுக்கு சுகிக்க கருவியாக இருந்தாள். இந்நாளில் இந்த மருமகளைப் பார்க்கையில் அன்றைய ஏமாற்றங்கள் மூர்க்கத்தனமாக தலையெடுக்க மருமகளைத் தன் ஆணைக்குள் வைக்க முயலுகிறாள் மகனைத் தன் வசம் முழுவதுமாக்கிக் கொள்ள முனைகிறாள். இந்தப்பரம்பரை வெவ்வேறு உருவங்களில் வெவ்வேறு வடிவங்களில் "மரபு" போன்றே தொடர்கிறது. மருமகள் தன் சம்பாத்தியத்தில் இவள் கேட்ட சீரை வாங்கி வருவது ஒப்புதற்குரியதாக இல்லை. பிறந்த வீட்டில் இருந்து ஏன் சீர்வரிசை வரவில்லை ?

வேலைக்குச் செல்லும் மருமகள் அன்றாடம் புதிய சேலை உடுத்துகிறாள், புதிய பொருளாதார வசதிகளை அநுபவக்கிறாள் வீட்டு வேலை என்ற முழுநேரப் பிடுங்கலில் இருந்து விடுபட வெளியுலகின் தோழமை கிடைக்கின்றன. அவளை ஒத்த பெண்கள் அலங்காரங்களுடன் மகிழ்ச்சியோடு பிரச்சனைகளை, சுமைகளைப் பரிமாறிக் கொள்ளவும் வாய்ப்புக்கள் இருக்கின்றன. இவற்றை எண்ணுகையில் மருமகள் வீட்டுச் செல்லும் குழந்தையைப் பார்த்துக் கொணடு நாளெல்லாம் சிறைக் கைதி போன்ற நிலையில் தன்னைக் கட்டி வைத்திருக்கும் பொறுப்புக்களைத் தட்டிக் கழிக்க முடியாமல் ஓய்வு காலத்திலும் தொல்லைப்படுவதை நினைத்த நினைத்துக் குமுறுகிறாள்.மருமகளின் ஒவ்வொரு சிறு நடப்பும் இவளுக்கு குற்றம் கற்பிக்கிறது. மருமகளையும், மகனையும் சேர்த்துப் பார்க்கவே வெறுக்கிறாள். மருமகளுடைய பொருளாதார ஆதாயத்தினால் என்ன நன்மை,?

இருட்டில் குமுறும் மாமியார் கொடியவளாகிறாள்.

www.tamilarangam.net

இதே மாமியார் வேலைக்கு செல்பவளாக இருந்து ஓய்வு பெற்றிருந்தாலும் கூட மருமகளைப் புரிந்து கொண்டு இணக்கம் காட்ட முடிவதில்லை. ஏனெனில் நெருக்கடிகளுக்கு சமுதாயத்தின் பல்வேறு கூறுகள் காரணங்கள் என்று புரிந்து கொள்ளவே பெண்கள் மறுக்கின்றார்கள் எனலாம்.

மகன் என்ற நிலையில் தாயின் மனம் அவனுக்குப் புரிவதில்லை. மனைவியின் நியாயங்களிலும் அவனுக்கு உள்ளோட்டமான கருத்து இல்லை. அவன் வரைக்கும் அவன் சுகமாக இடைஞ்சலின்றி வாழவேண்டும். சில வீடுகளில் ஆண் ஆதிக்கங்கள் பொருளாதார சுதந்திரத்தில் மிதக்கும் மனைவியைச் சார்ந்தே , அவளைக் கண்காணித்து , அவளை ஒடுக்குவதிலேயே கண்ணாக இருக்கின்றன. சம்பளம் முழுவதையும் இணக்கமாகவே வாங்கிக் கொள்வான். இச் செயலுக்கு மாமியார் பெரியவர் என்ற ஒப்புதலை ஆமோதிப்பை பெறுவதால் மனைவியின் மனத்தாங்கல் தன்மீது வீழாமல் தப்புகிறான்.

இந்த வீட்டு வழக்கம் சம்பளம் வாங்கினதும் புருஷன்கிட்ட கொடுத்து நமஸ்காரம் பண்ணிட்டுத்தான் எதுவும் வாங்கிக்கணும் அதுதான் மரியாதை.

என்று அந்த மாமியார் மருமகளுன்கு ஆணையிடுவதை மகனின் மீது கொண்ட பெரிய உரிமையாகக் கருதுகிறாள்.

குடும்பத்தில் திருமணமாகாத பெண்கள் இருந்தாலோ அவர்கள் தாயைச் சார்ந்தே தங்கள் வசதிகளை – உரிமைகளைப் பெறவோ சுரண்டவோ டுற்படுகிறார்கள். பெண் சுய தைரியாதையோடு பொருளாதார சுயச் சார்போடு நிற்பதே மதிக்கத்தக்கது என்று அறிவுறுத்தக்கூடிய நியதிகளே இல்லை.

இத்தகைய விரிசல்கள் மாமி – மருமகள் நாத்தி அண்ணி என்ற உறவில் மட்டுமின்றி தாய் – மகள் – சகோதரி என்ற உறவுகளில் இன்று மிகவும் இயல்பாக வந்து விட்டன.

மருமகளைச் சீர் கேட்டு எரிப்பதில் மாமியார் மட்டுமா கருத்துடன் இருக்கிறாள்? மகனும் அவன் தந்தையும் அதில் பங்கு பெறவில்லையா?

மூடத்தனமான கருத்துக்கள் தாயிடம் இருந்து வெளியானால் வெளியுலக அநுபவம் பெற்ற மகன் அவளை ஏன் புறக்கணிக்கக் கூபாது? தந்தை என்ற ஆதிக்க ஆண் அவளை இந்த விசயத்தில் அடக்கித் திருத்தவில்லை?

ஒருதாய் நடுத்தெருவுக்கு அடித்து விரட்டப்படும் போது கூட மகன் மனைவியுடன் சேர்ந்து அச் செயலைச் செய்வதாக வருகிறது. மருமகளைத் தாய் கொடுமைப் படுத்தினாள் அதனால் அவன் தாயை விலக்கினான் என்று நிகழ்வது அபூர்வம்.

www.tamilarangam.net

இவளைத் தொலைத்த வீட்டாள் நீ இன்னொரு கலியாணம் செய்து கொள்ளலாம் என்று மூடத்தாய் கூறினால் படித்துப் பட்டம் பெற்ற ஆணும் அதற்குக் கட்டுப்படுகிறான்.

வரதட்சணை கேட்பவர்கள் பெண்களே. என்ற குற்றச்சாட்டுக்கு நான் இவ்வாறு மறுமொழி கூறுவதுண்டு.

தாய் கூறும் நல்லுரைகளை எப்போதும் எல்லாப் பிள்ளைகளும் கேட்பதில்லை. புகை பிடிக்கச் சொல்லி தாய் வற்புறுத்துவதில்லை தாய் ஒருமகனை மதுவருந்தச் சொல்வதில்லை. ஆனால் வரதட்சணைக்கு மட்டும் தாய் சொல் தட்டாத தருமம் பாலிக்க வேண்டுமா? தந்தை எப்படி நழுவுகிறார்,

எங்களுக்கு ஒன்றும் முக்கியமில்லை எல்லாம் வீட்டில் அவள் என்ன சொல்கிறாளோ அப்படி . ஏனென்றால் இந்த மாதிரியான வீட்டு வழக்கங்கள் எல்லாம் அவளுக்குத்தான் தெரியும். என்பார்.

அவளுக்கு இந்த உயர்நிலை அதுவும் ஆண் இடும் நிலை. அருமையாக இப்போதல்லவா , இந்தப் பையனால் கிடைக்கிறது?

எந்த அறிவார்ந்த சிநதனையும் இவள் கருவத்தின் ஊடே குறுக்கிடுவதில்லை. கலியாணத்திற்குரிய மகனின் தாய் என்ற பேரார்வம் கருவத்துடன் தன் வாழ் நாளிலே முக்கிய சிகரத்தில் நிற்பதாக நினைத்துக் கொள்கிறாள்.

மிகப் பெரும்பாலான இடைநிலை வர்க்க குடும்பங்களின் நிலையே இப்படியென்றால் பொருளாதார பலம் மிகக் குறைந்த குடும்பப் பெண்களைப் பற்றி சொல்லவே வேண்டாம்.

இங்கு எல்லாப் பெண்களும் உடலால் உழைப்பவர்கள். சுரண்டலுக்குட்படுத்தப் படுபவர்கள். இங்கு எந்த தரும சட்ட , நியாய நெறிகளுக்கும் இடமில்லை. சாதிச் சமூக மூடவழக்கங்களும் ஆணாதிக்க மரபுகளும் ஜனநாயககட்சி அரசியலின் குண்டர் தருமங்களுமே கோலோச்சுகின்றன.

அன்றாட வாழ்வே அறைகூவலாக இருக்கும் சேரிகளில் பெண்மை, தனித்தனி மூர்க்கங்களாக குதறிக் கொள்ளும் காட்சிகள் பொழுது போக்குக் கலையம்சமாக பரிமாணம் பெற்றிருக்கின்றன.

உயர்மட்டப் பெண்களுக்கோ ஆடம்பரங்கள் களியாட்டங்கள் தவிர வேறு எந்த விதமான வடிகாலும் கிடையாது. பார்ட்டிகள், பியூட்டிபார்லர் , சீட்டுக்களியாட்டங்கள்ள , வெளிநாட்டுச் சாமான்கள் என்ற வட்டத்தில் மற்றவர்கள் தன்னை மேலாக நினைத்துப் புகழ வேண்டும் என்று எதை எதையோ செய்கிறார்கள் .

www.tamilarangam.net

சூசும் பகட்டு ஒளி வண்ணங்களிடையே நடப்பியல் உண்மைகளையும் , தன் சுய உணர்வுகளையும் புறக்கணிக்கப் பழகுகிறார்கள். இந்தப் பகட்டு நாகரீகங்களில் எல்லா ஒழுக்கங்களும் தகர்ந்து போகின்றன. எனவே எந்தப் பெண்ணும் தன் இனம் என்ற உணர்வில் ஒற்றுமையாக வலிமை பெறவோ பொதுவான அடக்குமுறை அநியாயங்களையோ, சுரண்டலையோ எதிர்க்க வேண்டும் என்ற உணர்வு பெறவே வாய்ப்பில்லாமல் போகிறது இந்த ஓர் ஐக்கிய உணர்வை அரசு சமுதாயம் சார்ந்த கேந்திரமான நிலைகளில் பதவி வகிக்கும் கெண்களாலேயே தோற்றுவிக்க முடியவில்லை.

ஓர் அதிகார வர்க்கப் பெண் அதிகாரியாகவே இருக்கிறாள் . கீழ்மட்டத்துப் பெண்களுக்கு தன் இனத்துக்கு மறுக்கப்படும் நியாயங்களை வழங்க வேண்டும் என்ற வகையில் இவளால் எந்த நன்மையும் செய்துவிட முடியவில்லை. ஏனெனில் ஆண் மேநிலை ஆதிக்க அரசமைப்பின் சட்ட திட்டங்களுக்கு அவள் உட்பட்டவள் . அவள் தன் பதவியை காத்துக் கொள்ள வேண்டியிருக்கிறது. எனவே ஓர் ஆண் அதிகாரி இன்னொரு பெண் அதிகாரி அல்லது ஊழியர் காட்டும் பரிவைக் கூட அவளால் காட்டமுடியவில்லை. ஏறக்குறைய பண்டைய " மாமியார் " மனப்பாங்கையே அவளும் கொண்டிருக்கிறாள்.

பெண் இனம் சுயசார்பு பெற்று வலிமையுடையதாகி உட் பிரிவுகளை அழித்துக் கொண்டு எழுச்சி பெறாத வண்ணம் ஆணாதிக்க சக்திகள் எப்போதும் விழிப்புடன் இருக்கின்றன.

பெண்ணுக்குப் பெண்தான் எதிரி ஆண் வர்க்கம் அல்ல என்று ஆணித்தரமாக எடுத்துரைத்துப் பெண் அமைச்சரும் தான் சார்ந்த கட்சித்தலைமைக்கும் பொதுக்கருத்துக்கும் உண்மையானவள் என்று பறைசாற்றிக் கொள்கிறாள். பத்திரிகைகள் இதைத் தெய்வவாக்காக விளம்பரம் செய்வதில் வியப்பு இல்லையே ?

நன்றி. காலந்தோறும் பெண்மை.

**வாசகர்களுக்கு!**

**அன்புடன்**

**உங்கள் அனைவரிமிருந்து வழமைபோல் ஆக்கங்களையும் விமர்சனங்களையும் எதிர்பார்க்கிறோம்.**

முகவரி
**SAKTI**
**BOKS 99 OPPSAL**
**0619 OSLO 6**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்